DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.11

(Accused present)

Name : மருத்துவர் திரு.சுதன் Caste :

Father's Name : Calling :

Village : Religion :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 13th day of March, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 26.05.2022ம் தேதியன்று விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, மாலை சுமார் 03.55 மணியளவில் ஆர் டி ஓ அவர்களிடமிருந்து வெம்பக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.178/2022 வழக்கில் காயத்ரி 27 வயது என்கிற பெண்ணின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள்கடிதம் பெற்று மாலை 04.00 மணியளவில் பெண் காவலர் 3918 திவ்யா என்பவரால் பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு நான் மற்றும் மருத்துவர் வெங்கடேஷ பிரசன்னா ஆகிய இருவரும் சேர்ந்து பிரேத பரிசோதனையை துவங்கினோம்.

பிரேதமானது புடவை, பாவாடை மற்றும் நைட்டி அணிந்து காணப்பட்டது. பிரேதத்தின் மீது மரண விறைப்பு காணப்பட்டது. பிரேதமானது மிதமான

கட்டமைப்புடனும், தேகத்துடனும் காணப்பட்டது. வெண் படலம் கனிந்த காணப்பட்டது. வாய் மூடிய நிலையில் காணப்பட்டது. நகத்தின் விரல்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. உடலின் மீது எவ்வித காயங்களும் காணப்படவில்லை. கழுத்து நல்ல நிலையில் காணப்பட்டது. நாவடி எலும்பு மற்றும் தைராய்டு கார்டிலேஜ் நல்ல நிலையில் காணப்பட்டது. மூச்சுக்குழாயில் எவ்வித அடைப்புகளும் காணப்படவில்லை. நெஞ்சுக்கூடு சாதாரண நிலையில் காணப்பட்டது. நுரையீரல்கள் கனிந்த நிலையில் காணப்பட்டது. இருதயம் சாதாரண நிலையில் காணப்பட்டது. இருதயத்தின் Coronaries பேட்டன்ட். வயிற்றில் 200 மில்லி பச்சை நிற திரவம் காணப்பட்டது. குறிப்பிடத்தக்க நச்சுப்பொருளுக்கான எவ்வித வாசனையும் காணப்படவில்லை. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் கனிந்து காணப்பட்டது. சிறுநீர் பையில் சிறுநீர் இன்றி காணப்பட்டது. கர்ப்பப்பை சாதாரண நிலையில் காணப்பட்டது. மூளை சாதாரண நிலையில் காணப்பட்டது.

பிரேத பரிசோதனை முடிந்து அதன் உள்ளுறுப்புக்கள் ரசாயண பகுப்பாய்விற்காக சேகரிக்கப்பட்டு வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. அதன் ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கை 806/2022 ன்படி சேகரிக்கப்பட்ட உள்ளுறுப்புகளில் எவ்வித நச்சுப்பொருள்களும் காணப்படவில்லை. அதன் அடிப்படையில் இறந்துபோன நபரின் இறப்பிற்கான காரணம் குறித்து கருத்து கூற இயலவில்லை என்று இருவரும் சேர்ந்து பிரேத பரிசோதனை அறிக்கையினை வழங்கினோம்.

இது தொடர்பாக சாத்தூர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து கேள்விகள் பெறப்பட்டு அதற்கு இருவரும் சேர்ந்து விடைகள் வழங்கினோம். அவர் கேட்ட கேள்விகளுக்கு வழங்கிய விடைகள் பின்வருமாறு

கேள்வி 1க்கான பதில் – பிரேத பரிசோதனையின் போது உடலில் வெளிப்புற காயங்களோ, உட்புறக்காயங்களோ காணப்படவில்லை, உள்ளுறுப்புகளை பரிசோதித்து அசாதாராண அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. உள்ளுறுப்புகளை ரசாயண பரிசோதனை செய்ததில் எவ்வித நச்சு மற்றும் மது காணப்படவில்லை என்று அறிக்கையின் அடிப்படையில் எங்களால் இறப்பிற்கான காரணத்தை உறுதியாக கூறமுடியவில்லை என்பதாகும்.

கேள்வி 2 க்கான பதில் – இல்லை என்றும்

கேள்வி 3 க்கான பதில் – இல்லை என்றும்

கேள்வி 4 க்கான பதில் – மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறந்திருந்தால் Nail beds Cyanosed ஏற்பட வாய்ப்புள்ளது என்றும்,

கேள்வி 5 க்கான பதில் – இல்லை என்றும்,

கேள்வி 6 க்கான பதில் – இல்லை என்றும்,

கேள்வி 7 க்கான பதில் – வயிற்றில் செரித்த உணவு அதிக நேரம் இருந்து உடல் அழுக ஆரம்பித்தால் இவ்வாறான வாடை வரக்கூடும் என்றும்.

கேள்வி 8 க்கான பதில் – 12 முதல் 24 மணிநேரம் என்றும்,

கேள்வி 9 க்கான பதில் – வாய்ப்புள்ளது என்றும்,

கேள்வி 10க்கான பதில் – சில பிரேத உடல்களில் வெளிப்புற மற்றும் உள்புற காயங்கள், உள்ளுறுப்புகளில் எவ்வித மாற்றங்கள் இல்லாமல், உள்ளுறுப்புகள் ரசாயண பரிசோதனையில் நச்சு பொருட்கள் எதுவும் கண்டறியப்படாமல் போக வாய்ப்புள்ளது. இம்மாதிரியான இறப்புகள் Negative Autopsy என்று கூறப்படும் ஆயினும் இந்த உடலின் Nail beds Cyanosed ஆக காணப்பட்டது, இந்த இறப்பு மூச்சு திணறலால் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்று கூற இயலும், ஆனால் இந்த மூச்சு திணறலுக்கான காரணம் என்னவென்று உறுதியாக கூற தடையங்கள் ஏதும் இந்த உடலில் காணப்படவில்லை, சில நேரங்களில் இயற்கை மரணத்திலும் இறப்பிற்கான காணரம் அறியாமல் போக வாய்ப்பு உள்ளது என்றும் பதில்கள் வழங்கினோம்.

நாங்கள் இறந்துபோன காயத்ரியை பிரேத பரிசோதனை செய்து வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.15, நாங்கள் வழங்கிய இறுதி கருத்துரை அ.சா.ஆ.16, எங்களுக்கு சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் கேள்விகள் கேட்டு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.17 (தற்போது அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு எதிரி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது), மேற்படி கடிதத்திற்கு நாங்கள் வழங்கிய பதில்கள் அ.சா.ஆ.18 ஆகும்.

காயத்ரி என்பவரின் பிரேத பரிசோதனைக்கு பின்னர் வெம்பக்கோட்டை காவல்நிலைய குற்ற எண்.178/2022 வழக்கில் இறந்துபோன கோகுல்ரக்சன் என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை வழங்குமாறு சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை பெற்று காவலர் 3165 ராஜசேகர் என்பவரால் பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு பிரேத பரிசோதனையை மாலை 04.00 மணிக்கு துவங்கினேன்.

உடலில் எவ்வித மச்சங்களும், அடையாளங்களும் காணப்படவில்லை. குழந்தையின் உடல் குளிர்விறைப்புடன் காணப்பட்டது. வயதிற்க்கு ஏற்ற வளர்ச்சியுடன் காணப்பட்டது. குழந்தையின் மீது எவ்வித பிறவிக் குறைபாடுகளும் காணப்படவில்லை. குழந்தையின் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டது. வெண்படலம் மற்றும் வாயின் உட்புற சளி நீலநிறத்தில் காணப்பட்டது. உதடுகள் நீல நிறத்தில் காணப்பட்டன. மூக்கு மற்றும் இருபுற கன்னங்களும் சிவந்த நிலையில் காணப்பட்டது. உடலின் மீது எவ்வித வெளிப்புற காயங்களும் காணப்படவில்லை. இருதயம் சாதாரண நிலையில் காணப்பட்டது. இருதயத்தின் மீது ரத்தப்புள்ளிகள் (Petechial spot) காணப்பட்டது. நாவடி எலும்பு சாதாரண நிலையில் காணப்பட்டது. வயிற்றில் 30 மில்லி அளவிலான வெள்ளை நிற திரவம் காணப்பட்டது. உட்புற சளி கனிந்து காணப்பட்டது. இருபக்க நுரையீரல்களும் சாதாரண நிலையில் காணப்பட்டன. இடது பக்க நுரையீரலில் ரத்தப்புள்ளிகள் (Petechial spot) காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் சாதாரண நிலையில் கனிந்து காணப்பட்டது.

சிறுகுடலில் 10 மில்லி அளவிலான மஞ்சள், வெள்ளை கலந்த திரவம் காணப்பட்டது. அதன் உட்புற சளி கனிந்து காணப்பட்டது. சிறுநீர்பையில் 10 மில்லி அளவிலான சிறுநீர் காணப்பட்டது. மூளை நல்ல நிலையில் காணப்பட்டது.

பிரேத பரிசோதனை முடிந்து அதன் உள்ளுறுப்புகள் ரசாயண பகுப்பாய்விற்காக சேகரிக்கப்பட்டு ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் ஆய்வறிக்கை எண் 807/2022 பெற்றப்பட்டது. இறப்பிற்கான காரணம் மூச்சுத்திணறல் (Smothering).

நான் இறந்துபோன கோகுல்ரக்சனின் பிரேதத்தை பரிசோதனை செய்து வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.19 ஆகும். நான் வழங்கிய இறுதி கருத்துரை அ.சா.ஆ.20 ஆகும். இறந்துபோன கோகுல்ரக்சனின் இறப்பு சம்மந்தமாக சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் எனக்கு 5 கேள்விகள் கேட்டு அனுப்பிய கடிதத்திற்கு நான் வழங்கிய பதில்கள் அ.சா.ஆ.21 ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் எனக்கு காயத்ரியின் இறப்பு குறித்து அனுப்பிய கேள்விகள் அடங்கிய கடிதம் எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்றால் குறிப்பாக தேதி தெரியவில்லை. பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள்கடிதம் என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் நானும், மருத்துவர் வெங்டேஷ பிரசன்னாவும் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மருத்துவர் வெங்டேஷ பிரசன்னா வாங்கியுள்ளார். 10 வது கேள்விக்கான பதிலில் இந்த மூச்சு திணறலுக்கான காரணம் என்னவென்று உறுதியாக கூற தடையங்கள் ஏதும் இந்த உடலில் காணப்படவில்லை, சில நேரங்களில் இயற்கை மரணத்திலும் இறப்பிற்கான காணரம் அறியாமல் போக வாய்ப்பு உள்ளது என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான். பொதுவாக தாய்மார்கள் குழந்தைக்கு பாலூட்டும் போது உட்கார வைத்தும், படுக்கவைத்தும்

கொடுப்பது வழக்கம் என்றால் உட்கார வைத்து தான் கொடுக்கவேண்டும், படுக்க வைத்து பால் கொடுக்கலாம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பொதுவாக தாய் படுக்க வைத்து குழந்தைக்கு பால் கொடுக்கும்போது அந்த தாய் இயற்கையாக மரணமடைந்து அந்த தாய் குழந்தையின் மீது சாயும் போது அந்த குழந்தையின் மூக்கு மற்றும் வாயை சுற்றியுள்ள பகுதி சிவந்து, குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட வாய்புண்டு என்றால் மூக்கு மற்றும் வாயை சுற்றியுள்ள பகுதி சிவக்க வாய்ப்பு இல்லை, தாயின் எடையின் காரணமாக குழந்தைக்கு மூச்சுத்திணறல் ஏற்பட வாய்ப்புண்டு. தாய் குழந்தையின் மீது சாயும் போது அந்த குழந்தையின் மூக்கு மற்றும் வாயை சுற்றியுள்ள பகுதி சிவக்க வாய்ப்புண்டு என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>